**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 557/2022**

Prosecution witness: **2**

| | | | |
|---|---|---|---|
| Name: | சக்திவேல் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

**A1, A2 , A3 present.**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **13.04.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தருமத்துபட்டி அருகில் உள்ள போடம்பட்டியில் குடியிருந்துவருகிறேன். நான் தருமத்துப்பட்டியில் டீக்கடையில் வேலை பார்க்கிறேன். தருமத்துப்பட்டியில் சுமார் 500 வீடுகள் இருக்கும். தருமத்துப்பட்டியில் ராமர் என்ற ஆரோக்கியத்தை தெரியும். அவர் தோட்டம் வைத்துள்ளார். அவர்கள் தோட்டத்திற்கு போலீசார் போனார்களா என்று எனக்கு தெரியாது. பிச்சை ஆசாரி மகன் சுப்பிரமணி யார் என்று என்கு தெரியாது. அவரும் போடம்பட்டிக்காரர் என்றால் அதுபற்றி தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. நான் அவர்களை பார்த்தது இல்லை. என்னிடம் காட்டப்படும் பசுங்கிளியின் அத்தாட்சியில் காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான். என்னுடைய கையொப்பத்தின் மேல் உள்ள கையொப்பம் யாருடையது என்று எனக்கு தெரியாது. கன்னிவாடி

காவல் நிலையத்தில் வைத்து 7-8 வருடங்களுக்குமுன்னர் போலீசார் கையொப்பம் வாங்கினார்கள். மாலை காவல் நிலையத்தில் நான் கையெழுத்து இடும்போது போலீசாரை தவிர வேறு எவரும் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. பசுங்கிளியின் அத்தாட்சியில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ. 5 ஆகும்.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

01.08.2013ம் தேதி காலை 8.00 மணிக்கு தருமத்துப்பட்டி கோப்பை ரோட்டில் நானும் பிச்சை ஆசாரி மகன் சுப்பிரமணி என்பவரும் புறாமரம் பேருந்து நிறுத்ததில் நின்று கொண்டிருந்ததாகிவும் அப்போது போலீசார் அங்கு வந்தார்கள் என்றும் ஆய்வாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பசுங்கிளியும் சௌந்தரபாண்டியும் அதே பேருந்து நிறுத்தில் நின்றுகொண்டிருநதனர் என்றும் போலீசார் அங்கு வந்து அவர்கள் இருவரையும் எங்கள் முன்னிலையில் விசாரணை செய்தார்கள் என்றும் ஆய்வாளர் விசாரித்ததபோது அவர்கள் இருவரும் தனித்தனியே வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும் நான் என்றும் ஆய்வாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சௌந்திரபாண்டி கொடுத்த வாக்குமூலத்தில் ஆரோக்கியம் மகன் ராமர் என்பவர் தோட்டத்தில் பாறைக்கொட்டை பிரிவு மண் ரோட்டில் மொட்டுக்கோம்பையில் உள்ள ஆஸ்பெட்டாஸ் செட்டிற்கு தெற்கில் கருவேல மரப்புதரில் கஞ்சா வைத்திருப்பதாகவும் ஆய்வாளரிடம் ஆஜர் படுத்தினார் என்று கூறினார் என்றும் அதில் நானும் சுப்பிமணியும் கையொப்பம்

இட்டோம் என்றும் என்றும் ஆய்வாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதன் பின்னர் அவர் மனைவி பசுங்கிளியும் அவ்வாறு வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதையும் ஆய்வாளர் என்முன்னரும் பாலசுப்பிரமணி முன்னரும் பதிவு செய்தார் என்றும் ஆய்வாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதன் பின்னர் சௌந்திரபாண்டியன் ஆஸ்பெட்டாஸ் சீட்டிற்கு பக்கம் இருந்த முள் புதரில் இருந்து கஞ்சாவை எடுத்து ஆஜர் படுததினார் என்றும் அதன் அருகிலேயே பசுங்கிளியும் கஞ்சாவை எடுத்து ஆஜர் படுத்தினார் என்றும் ஆய்வாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கஞ்சாவை கைப்பற்றியதற்கு போலீசார் அத்தாட்சி தயாரித்தார் என்றும் அதில் நானும் சுப்பிரமணியும் கையொப்பம் செய்தோம் என்று ஆய்வாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தருமத்துப்பட்டியில டீக்கடையில் வேலை பார்ப்பதால் எனக்கு எதிரிகளை தெரியும் என்றும் அவர்கள் எங்கள் கடையின் வாடிக்கையாளர்கள் என்றும் அவர்களை காப்பாற்றும் நோக்கத்துடன் பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் போட்ட கையொப்பத்திற்கு மேல் எழுதப்படவில்லை.